www.kalvisolai.com

# உயிர்-தாவரவியல்

## முக்கியமான 3 மதிப்பெண்கள் வினா–விடைகள்

**1. தாவர வகைப்பாட்டின் நோக்கங்களை எழுதுக.**

1. ஒத்த பண்புகளின் அடிப்படையில் தாவரங்களை ஒழுங்கான முறையில் வரிசைப்படுத்துதல்.
2. வெவ்வேறு தொகுதிகளுக்கு இடையேயுள்ள தாவரங்களின் மரபு வழியை நிலை நிறுத்துகிறது.

**2. வகைப்பாட்டின் பல்வேறு வகைகளைக் கூறுக.**

அ. செயற்கை முறை வகைப்பாடு – லின்னேயஸ்
ஆ. இயற்கை முறை வகைப்பாடு – பெந்தம் மற்றும் ஹூக்கர்
இ. மரபு வழி முறை வகைப்பாடு – சார்லஸ் டார்வின், எங்ளர் & ப்ராண்டல்

**3. பூக்கும் தாவரங்களின் மூன்று வகுப்புகள் யாவை?**

1. டைகாட்டிலிடனே 2. ஜிம்னோஸ்பெர்மே 3. மானோகாட்டிலிடனே

**4. டாட்டோனிம் - வரையறு:-**

ஒரு தாவரத்தின் பேரினப் பெயரும், சிற்றினப் பெயரும் ஒரே மாதிரியாக இருக்குமேயானால் அத்தகைய பெயர் **டாட்டோனிம்** எனப்படும். எ.கா: *சாசாஃப்ரஸ் சாசாஃப்ரஸ்*

**5. இரு சொற் பெயரிடு முறை என்றால் என்ன?**

ஒவ்வொரு தாவரத்திற்கும் இரு சொற்களைக் கொண்டு பெயரிடும் முறைக்கு **இரு சொற்பெயரிடு முறை** என்று பெயர். முதற்பெயர் பேரினத்தையும், இரண்டாவது பெயர் சிற்றினத்தையும் குறிக்கும்.

எ.கா: மாமரத்தின் இருசொற் பெயரிடுமுறை – *மாஞ்சிபெரா இண்டிகா*

*மாஞ்சிபெரா* – பேரினத்தையும், *இண்டிகா* – சிற்றினத்தையும் குறிக்கும் சொல் ஆகும்.

**6. நாமென் ஆம்பிகுவம் என்றால் என்ன?**

தவறான மூலத்திலிருந்து ஒரு தாவரம் பெயர் சூட்டப்பட்டிருந்தால் இப்பெயர் தவறான பெயர் அல்லது **நாமென் ஆம்பிகுவம்** எனப்படும். இத்தகைய பெயர் உபயோகத்திலிருந்து முழுமையாக நிராகரிக்கப்பட்டது.

**7. மூல உலர் தாவர மாதிரி என்றால் என்ன?**

ஒரு தாவர சிற்றினத்திற்கு புதிய பெயர் சூட்டும்போது, அந்த தாவரத்தின் ஹெர்பேரிய உலர் தாவர மாதிரியை அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஹெர்பேரிய நிறுவனத்தில் முறையாக பாதுகாக்கப்பட வேண்டும். அவ்வாறு பாதுகாக்கப்படும் தாவரப் பகுதி **மூல உலர் தாவர மாதிரி** எனப்படும்.

**8. ஹெர்பேரியம் என்றால் என்ன?**

அழுத்தி உலர்த்தப்பட்டு, தாளில் ஒட்டப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவதொரு வகைப்பாட்டின்படி வரிசைப்படுத்தப்பட்ட உலர் தாவரத் தொகுப்பு **ஹெர்பேரியம்** எனப்படும்.

**9. அட்ரோ∴பின் என்றால் என்ன?**

சொலானேசி குடும்பத்தின் *அட்ரோபா பெல்லடோனா* தாவர வேர்களிலிருந்து பிரித்தெடுக்கப்படும் ஆல்கலாய்டு **அட்ரோபின்** எனப்படும். இது தசை வலியை நீக்கப் பயன்படுகிறது.

**10. கிளாடோடு என்றால் என்ன? எ.கா தருக.**

யூபோர்பியாவின் பல சிற்றினங்களின் தண்டு ஒளிச்சேர்க்கையை மேற்கொள்ள உருமாற்றம் அடைந்துள்ளது. இத்தகைய உருமாற்றம் **கிளாடோடு** எனப்படும். எ.கா: *யூ.திருக்கள்ளி.*

**11. பாலிகேமஸ் என்றால் என்ன? எ.கா. தருக.**

ஒரே தாவரத்தில் ஆண் மலர்கள், பெண் மலர்கள் மற்றும் இருபால் மலர்கள் காணப்பட்டால் அது **பாலிகேமஸ்** எனப்படும். எ.கா: மியூசா (வாழை).

PRASANNA'S

**12. ஆக்குத்திசு என்றால் என்ன?**

தொடர்ந்து பகுப்படையும் தன்மைக் கொண்ட ஒத்த அமைப்புடைய செல்களால் ஆன தொகுதி **ஆக்குத்திசு** எனப்படும். பெரிய உட்கருவையும் அடர்ந்த சைட்டோபிளாசத்தையும் பெற்று காணப்படும். செல்கள் நெருக்கமாக காணப்படும்.

**13. ஸ்டெல்லேட் பாரன்கைமா என்றால் என்ன?**

வாழை மற்றும் கல்வாழை தாவரங்களின் இலைக்காம்புகளில் நட்சத்திர வடிவ பாரன்கைமா செல்கள் காணப்படுகின்றன. இவை **ஸ்டெல்லேட் பாரன்கைமா** எனப்படும்.

**14. ஸ்கிளீரைடுகளை நார்களில் இருந்து வேறுபடுத்துக.**

| ஸ்கிளிரைடுகள் | நார்கள் |
|---|---|
| குட்டையானவை | நார்கள் நீளமானவை |
| செல்சுவர்களில் நார்களைவிட அதிக குழிகள் காணப்படுகின்றன. | செல்சுவர்களில் குறைவான குழிகள் காணப்படுகின்றன. |
| கிளைத்த குழிகள் காணப்படுகிறது | எளிய குழிகள் காணப்படுகிறது |

**15. பிரேக்கி ஸ்கிளிரைடுகள் என்றால் என்ன?**

சம அளவுடைய ஸ்கிளீரைடுகள் **பிரேக்கி ஸ்கிளீரைடுகள்** அல்லது **கல் செல்கள்** எனப்படும்.

எ.கா: பேரிக்கனியின் தளத்திசு.

**16. மேற்பரப்பு நார்கள் என்றால் என்ன?**

சில தாவர விதைகளின் விதையுறையிலிருந்து தோன்றுகின்ற நார்கள் **மேற்பரப்பு நார்கள்** எனப்படும். எ.கா: பருத்தி.

**17. காஸ்பாரியன் பட்டைகள் என்றால் என்ன?**

அகத்தோல் செல்களின் ஆரச்சுவரிலும், கிடைமட்ட சுவரிலும் சுபாரின் என்ற பொருளால் ஆன தடிப்புகள் காணப்படுகின்றன. இவை **காஸ்பாரியன் பட்டைகள்** எனப்படும்.

**18. வழிச் செல்கள் என்றால் என்ன?**

புரோட்டோ சைலத்திற்கு எதிரிலுள்ள அகத்தோல் செல்களில் காஸ்பாரியன் பட்டைகள் காணப்படுவதில்லை. இச்செல்கள் **வழிச்செல்கள்** எனப்படும். இவை நீரையும், நீரில் கரைந்துள்ள உப்புகளையும் புறணியில் இருந்து சைலத்திற்கு கடத்துகின்றன.

**19. யூஸ்டீல் என்றால் என்ன?**

இருவித்திலை தாவர தண்டில் வாஸ்குலார் கற்றைகள் பித்தைச் சூழ்ந்து ஒரு வளையமாக அமைந்துள்ளது. இவ்வகை ஸ்டீலானது **யூஸ்டீல்** எனப்படும்.

**20. காப்பு செல்கள் என்றால் என்ன?**

ஒவ்வொரு இலைத்துளையையும் ஓர் இணை அவரை விதை வடிவ செல்கள் சூழ்ந்துள்ளன. இவை **காப்பு செல்கள்** எனப்படும். இவை இலைத்துளை மூடுதல் மற்றும் மூடுதலில் பங்குபெறுகிறது.

**21. ஜீன் என்பதை வரையறு.**

ஜீன் என்பது இயற்பியல் மற்றும் செயல்படும் பாரம்பரிய அலகு ஆகும். இது ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு பண்புகளை எடுத்துச் செல்கிறது. இது குரோமோசோம்களில் உள்ளது என பிரிட்ஜஸ் கண்டுபிடித்தார்.

PRASANNA'S

**22. கொல்லி திடீர் மாற்றம் என்றால் என்ன? எ.கா. தருக.**

சில திடீர் மாற்றங்களால் ஜீன்களில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்துவதால் அந்த உயிரினம் இறந்துவிடுகிறது. இத்தகைய திடீர்மாற்றம் கொல்லி திடீர்மாற்றம் எனப்படும். எ.கா: சோளம். தாவரத்தில் ஒடுக்க திடீர்மாற்றத்தினால் பச்சையம் உண்டாவதில்லை. எனவே அவை நாற்று நிலையிலேயே இறந்துவிடுகின்றன.

**23. ஜீன் திடீர்மாற்றம் – வரையறு.**

ஒரு சிறிய DNA-வில் உள்ள ஒரு நியூக்ளியோடைடு அல்லது இணையாக உள்ள இரு காரங்களில் ஏற்படும் திடீர்மாற்றம் புள்ளி அல்லது **ஜீன் திடீர்மாற்றம்** எனப்படும்.

**24. மறுசேர்க்கை DNA என்பதை வரையறு.**

மரபு ரீதியாக மாற்றியமைக்கப்பட்ட DNA துண்டங்கள் **மறுசேர்க்கை DNA** என்று அழைக்கப்படுகிறது.

**25. ரெஸ்ட்ரிக்ஷன் எண்டோநியூக்ளியஸ் என்பது யாது?**

பாக்டீரியங்களின் உற்பத்தி செய்யப்படும் நொதிகளே **ரெஸ்ட்ரிக்ஷன் எண்டோ நியூக்ளியஸ்கள்** அல்லது சுத்திகரிக்கும் நொதிகள் எனப்படும். இது டி.என்.ஏ இழைகளை துண்டிக்க பயன்படுகிறது.

**26. அயல் ஜீன் பெற்ற இருவித்திலை தாவரங்கள் 3 கூறு.**

1. *காசிப்பியம் ஹிர்சூட்டம்* 2. *சொலானம் டுபரோசம்* 3. *பீட்டா வல்காரிஸ்*

**27. உயிரிப் பொருள் கொள்ளை என்றால் என்ன? ஒரு எடுத்துக்காட்டு தருக.**

**உயிரிப் பொருள் கொள்ளை:** தகுந்த அனுமதியின்றி, ஒரு நாட்டின் உயிரி ஆதார வளங்களை சுயநலக் குறிக்கோளுடன் பல அமைப்புகளும், பன்னாட்டு நிறுவனங்களும் இரகசியமாக சுரண்டுவது, பயன்படுத்துவது **உயிரி கொள்ளை** அல்லது **உயிரிப் பொருள் கொள்ளை** எனப்படும்.

**எடுத்துக்காட்டு:** நெடுங்காலமாகவே பாசுமதி அரிசி இந்தியாவில், இந்த நாட்டுக்கே உரிய ஒன்றாக உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் பாசுமதி அரிசி தாவரம் தொடர்பான எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக காப்புரிமை அளித்துள்ளது.

**28. கேலஸ் என்பதை வரையறு.**

ஒழுங்கற்ற, வேறுபாடு அடையாத பாரன்கைமா திசுத்திரள் **கேலஸ்** எனப்படும். இது ஆக்ஸின் மற்றும் சைட்டோகைனின் செயல்பாட்டால் தோன்றுகிறது.

**29. உடல வழி கரு என்றால் என்ன?**

கேலஸ் திசு வேறுபாடடைந்து வேர்கள் மற்றும் தண்டுகள் தோன்றுகிறது. இத்தகைய உறுப்புகளைக் கொண்ட கருக்கள் **உடல வழிக் கருக்கள்** எனப்படும்

**30. நுண்ணுயிர் நீக்கம் என்றால் என்ன?**

வளர்ப்பு ஊடகம் மற்றும் தாவர திசுக்களில் உள்ள நுண்ணுயிர்களான பாக்டீரியங்கள் மற்றும் பூஞ்சைகள் ஆகியவற்றை நீக்க பின்பற்றப்படும் முறை **நுண்ணுயிர் நீக்கம்** எனப்படும். எ.கா. மெர்குரி குளோரைடு

**31. தனி செல் புரதம் வரையறு.**

உணவு மற்றும் தீவனமாக பயன்படும் பல்வேறு நுண்ணுயிரிகளான பாக்டீரியா, ஈஸ்ட், இழைப்பூஞ்சை மற்றும் பாசிகளின் செல்களே **தனி செல் புரதம்** எனப்படும். எ.கா: பாசிகள் – *ஸ்பைரூலினா.*

PRASANNA'S

**32. நீர் ஒளிப் பிளத்தல் என்றால் என்ன?**

ஒளியின் உதவியால் நீர் மூலக்கூறுகள் புரோட்டான், எலக்ட்ரான் மற்றும் ஆக்ஸிஜன் அயனியாக பிளக்கப்படுதல் **நீர் ஒளிப்பிளத்தல்** எனப்படுகிறது. இது PS–II ஆக்ஸிஜனேற்ற நிலையில் நடைபெறுகிறது.

**33. ஒளிச்சேர்க்கையின் ஒட்டுமொத்த சமன்பாட்டை எழுது.**

$$CO_2 + 2\,H_2O \xrightarrow[\text{பச்சையம்}]{\text{சூரிய ஒளி ஆற்றல்}} (CH_2O)\,n + H_2O + O_2$$

**34. காற்றில்லா சுவாசத்தை வரையறு.**

தனி ஆக்ஸிஜன் மூலக்கூறுகள் இன்றி நடைபெறும் சுவாசித்தல் நிகழ்ச்சி **காற்றில்லா சுவாசம்** எனப்படும்.

**35. PEG என்றால் என்ன?**

பாலி எத்திலின் கிளைக்கால். இது தனிமைப்படுத்தப்பட்ட புரோட்டோபிளாஸ்ட்டுகளை இணைக்கத் தூண்டும் இணைவுக் காரணியாக செயல்படுகிறது.

**36. சுவாச ஈவு என்பதை விளக்குக.**

சுவாசித்தலின்போது வெளியிடப்படும்ஸ் $CO_2$-க்கும், பயன்படுத்தப்படும் $O_2$–க்கும் இடையே உள்ள வீதமே **சுவாச ஈவு** எனப்படும்.

$$\text{சுவாச ஈவு} = \frac{\text{வெளிப்படும் } CO_2 \text{ அளவு}}{\text{பயன்படுத்தப்படும் } O_2 \text{ அளவு}}$$

**37. நொதித்தல் என்றால் என்ன?**

குளுக்கோஸ் மூலக்கூறு காற்றில்லாது சிதைவுற்று கார்பன்–டை–ஆக்ஸைடாகவும், எத்தில் ஆல்கஹாலாகவும் மாறும் நிகழ்ச்சி **நொதித்தல்** எனப்படும்.

$$\underset{\text{குளுக்கோஸ்}}{C_6H_{12}O_6} \xrightarrow{\text{ஈஸ்ட்}} 2CH_3CH_2OH + 2CO_2 + \text{ஆற்றல்}$$

**38. ரிச்மண்ட் லாங் விளைவு என்றால் என்ன?**

தாவரங்கள் முதுமை அடைவதை சைட்டோகைனின் தாமதப்படுத்தகிறது. இது **ரிச்மண்ட் லாங்க்** விளைவு.

**39. போல்டிங் என்பதை வரையறு.**

ஜிப்ரலின் ஹார்மோனால் திடீரென தண்டு நீள்வதும், அதைத் தொடர்ந்து மலர்தல் நிகழ்வதும் **போல்டிங்** என அழைக்கப்படுகிறது.

**40. முனை ஆதிக்கம் என்றால் என்ன?**

நுனி மொட்டானது அது உற்பத்தி செய்யும் ஆக்ஸின் ஹார்மோன் மூலம் பக்க மொட்டின் வளர்ச்சியை தடை செய்வது **நுனி ஆதிக்கம் (அ) முனை ஆதிக்கம்** எனப்படும்.

**41. ஹெட்டிரோசிஸ் என்றால் என்ன?**

இரு பெற்றோர் மூலம் உருவாகும் முதல் சந்ததியைச் சேர்ந்த கலப்பினங்கள் எப்போதும் பெற்றோரைவிட அதிகத் திறன், செயல்பாடு பெற்றிருப்பது **கலப்பின வீரியம்** அல்லது **ஹெட்டிரோசிஸ்** எனப்படும்.

**42. உயிர் மருந்து என்பதை வரையறு.**

மருத்துவத் தாவரங்களில் இருந்து பெறப்படும் விலை மதிப்புள்ள மருந்துப் பொருட்கள் **உயிரி மருந்துகள்** என அழைக்கப்படுகின்றன. எ.கா: டிஜாக்ஸின்

**43. ஹியுமிலின் என்றால் என்ன?**

எ.கோலை பாக்டீரியத்தினுள் மனித இன்சுலின் உற்பத்திக்கான ஜீனை நுழைத்து அந்த பாக்டீரியமே இன்சுலின் உற்பத்தி செய்யுமாறு உருவாக்கியுள்ளனர். இந்த இன்சுலின் **ஹியுமுலின்** என அழைக்கப்படுகிறது.

**தோல்வி உன்னை தோற்கடிக்கும் முன்**
**தோல்வியை நீ தோற்கடித்துவிடு!**

**44. குளிர்பதனம் – வரையறு.**

ஈராண்டுத் தாவரங்கள் மற்றும் பல்லாண்டுத் தாவரங்களில் மலர்தலானது மிகக்குறைவான வெப்பநிலையில் (1°C-லிருந்து 10°C)தூண்டப்படுகிறது. இதுவே **குளிர்ப்பதனம்** எனப்படும்.

**45. மரபு பொறியியல் வரையறு.**

புதிய ஜீன் தொகுப்புகளை உருவாக்குவதற்கு குறிப்பிட்ட வகையில் DNA–வை கையாளும் வழிமுறை அல்லது மாற்றியமைக்கப்பட்ட ஜீன்களை மற்ற உயிரினங்களில் சேர்க்கும் வழிமுறையே **மரபுப் பொறியியல்** ஆகும்.

PRASANNA'S

**46. பிளாஸ்மிடுகள் என்றால் என்ன?**

*எஸ்செரிசியா கோலை* மற்றும் பல பாக்டீரியாக்களில் ஒரு பெரிய வட்ட வடிவ குரோமோசோமுடன், பல சிறு வட்ட வடிவ DNA துண்டுகளையும் பெற்றுள்ளன. இத்துண்டுகள் **பிளாஸ்மிடுகள்** என்றழைக்கப்படுகின்றன.

**47. ஒளிச்சுவாசத்தை வரையறு.**

ஒளி இருக்கும்போது ஒளிச்சேர்க்கை செய்யும் திசுக்களில் வழக்கத்தைவிட அதிகமாக நடைபெறுகின்ற சுவாசம் **ஒளிச்சுவாசம்** எனப்படும். இது பசுங்கணிகம், பெர் ஆக்ஸிசோம் மைட்டோகாண்ட்ரியாக்களில் நடைபெறும்.

**48. ஒளிச்சுவாசத்திற்கும், இருட்சுவாசத்திற்கும் உள்ள வேறுபாடுகளை கூறு.**

| வ. எண் | ஒளிச்சுவாசம் | இருட்சுவாசம் |
|---|---|---|
| 1 | இது ஒளிச்சேர்க்கை செல்களில் மட்டுமே நடைபெறுகின்றது. | இது அனைத்து உயிருள்ள செல்களிலும் மைட்டோகாண்ட்ரியாவில் நடைபெறுகிறது. |
| 2. | இது ஒளி இருக்கும்போது மட்டுமே நடைபெறும். | இது ஒளி மற்றும் ஒளி இல்லாத சூழலில் நடைபெறும். |
| 3. | இது பசுங்கணிகம், பெர் ஆக்ஸிசோம் மைட்டோகாண்ட்ரியாக்களில் நடைபெறும். | இது மைட்டோகாண்ட்ரியாவில் நடைபெறுகிறது. |

**49. DNA-விற்கும், RNA-விற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?**

| வ. எண் | DNA | RNA |
|---|---|---|
| 1 | இதில் 5கார்பன் டி ஆக்ஸி ரைபோஸ் சர்க்கரை உள்ளது. | இதில் 5கார்பன் ரைபோஸ் சர்க்கரை உள்ளது. |
| 2 | இதில் அடினைன், குவானைன், சைட்டோசின் மற்றும் தைமின் உள்ளன. | குவானைன் சைட்டோசின் மற்றும் யூராசில் உள்ளது. |
| 3 | இது பெரும்பாலும் இரட்டைச் சுருள் இழையாக உள்ளது. | இது பெரும்பாலும் ஓர் இழையாலான அமைப்பாகும். |
| 4 | இது மிக நீளமானது. | இது குட்டையானது. |
| 5 | நொதிகளினால் இது எளிதில் மற்றும் சற்று மாறும் தன்மை உடையது. | இது நொதிகளினால் பாதிக்கப்படுவது பாதிக்கப்படுவதில்லை மற்றும் மாறாதது. |

**50. மலர் சூத்திரம் எழுதுக.**

1. **மால்வேசி (பருத்தி குடும்பம்)**

   Br., Brl., $\oplus$, ⚥, $K_{(5)}, C_5, A_{(\infty)}, \underline{G}_{(5)}$

2. **சொலானேசி ( உருளைக்கிழங்கு குடும்பம்)**

   Br., Ebrl., $\oplus$, ⚥, $K_{(5)}, \overparen{C_{(5)}, A_5}, \underline{G}_{(2)}$.

3. **யூ.்.போர்பியேசி (ஆமணக்கு குடும்பம்)**

   **ஆண் மலர்** Br., Ebrl., $\oplus$, ♂, $P_{(5)}, A_{\infty}, G_0$.

   **பெண் மலர்** Br., Ebrl., $\oplus$, ♀, $P_{(3)}, A_0, \underline{G}_{(3)}$.

4. **மியூசேசி (வாழைக் குடும்பம்)**

   Br., Ebrl., $\otimes$, ⚥, $P_{(3+2)+1}, A_{3+3}, \overline{G}_{(3)}$.

**என்னால் முடியாது எனில்**
**உலகத்தில் வேறு எவராலும் முடியாது.**
**என்னால் மட்டுமே முடியும்.**
**நான் சாதிக்கப் பிறந்தவன்.**